தலைப்பு 291 - கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவத் திணைக்களத்தின் 2024 டிசெம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமை தொடர்பான கூற்று, அத்திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று மற்றும் நிதிப் பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள் கைகளுக்கு உரிய தகவல்கள் என்பவற்றை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்கு உரிய குறிப்புக்களை உள்ளடக்கிய 2024 டிசெம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவத் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்படும் மேற்படி நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரிடம் விரிவான வருடாந்த முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை உரிய நேரத்தில் வழங்கப்படும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்புச் சட்டத்தின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் நாயகம் அவர்களின் அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

மேற்படி அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டு உள்ள விடயங்களின் ஊடான பாதிப்பு தவிர்ந்த, நிதிக் கூற்றுக்களின் மூலம் 2024 டிசம்பர் 31 ஆம் திகதியன்று கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்துடன் நிறைவடையும் வருடத்திற்கான அதன் நிதிச் செயலாற்றுகை மற்றும் நிதிப் பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு ஒத்தியங்கும் வகையில் உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

1.2 முனைப்பழிவுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பது எனது நம்பிக்கை ஆகும்.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව   இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.   No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34   +94 11 2 88 72 23   ag@auditorgeneral.gov.lk   www.naosl.gov.lk

1.3 விடயம் ஒன்றினை வலியுருத்துதல் - நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதன் அடிப்படை

இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் அடிப்படையினை விபரிக்கும் நிதிக் கூற்றுக்களுக்கு உரிய குறிப்பு 1 தொடர்பில் கவனத்தினைக் கோருகின்றேன். நிதிக் கூற்றுக்கள் அரச நிதி ஒழுங்குவிதி 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆம் திகதி திருத்தம் செய்யப்பட்ட 2024 ஆம் ஆண்டின் டிசம்பர் 16 ஆம் திகதிய மற்றும் 06/2024 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டல் என்பவற்றிற்கு அமைய கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையேர வளங்கள் முகாமைத்துவத் திணைக்களம், பொதுத் திறைசேரி மற்றும் பாராளுமன்றம் என்பவற்றின் தேவைப்பாட்டிற்காக தயாரிக்கப்பட்டு உள்ளது. ஆதலால், இந்த நிதிக் கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்காக பொருத்தமற்றதாக அமைய முடியும். எனது அறிக்கை சட்ட ஆணைக்குழுத் திணைக்களம், பொதுத் திறைசேரி மற்றும் இலங்கைப் பாராளுமன்றம் என்பவற்றின் பயன்பாட்டினை மாத்திரம் நோக்காகக் கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயம் மாற்றி அமைக்கப்படமாட்டாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரச நிதி ஒழுங்குவிதி 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆம் திகதி திருத்தம் செய்யப்பட்ட 2024 ஆம் ஆண்டின் டிசம்பர் 16 ஆம் திகதிய மற்றும் 06/2024 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டல் என்பவற்றிற்கு ஒத்தியங்கும் வகையில் சகல அளவு சார் தன்மைகள் தொடர்பிலும் நியாயமான நிலைமை ஒன்றினைப் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய அளவுசார் பிறழ் கூற்றுக்கள் இன்றிய வகையில் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமாகும் வகையில் தேவைப்படும் உள்ளக நிருவாகத்தினை தீர்மானித்தல் என்பன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16 (1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்தம் மற்றும் காலத்திற்கு ஏற்ற வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் என்பன பேணி வரப்படுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 38 (1) (ஈ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதி நிருவாகத்திற்காக விளைதிறன் மிகு உள்ளக நிருவாகக் கட்டமைப்பு ஒன்றினைத் தயாரித்துப் பேணி வருவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்தல் வேண்டும் என்பதுடன் மேற்படி கட்டமைப்பின் விளைதிறன் தொடர்பாக அவ்வப்போது மீளாய்வு ஒன்றினை மேற்கொண்டு அதற்கு அமைய கட்டமைப்பினை விளைதிறனுடைய வகையில் பேணி வருவதற்குத் தேவையான மாற்றங்களை மேற்கொள்ளல் வேண்டும்.

1.5 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாகப் பார்க்கும் போது நிதிக் கூற்றுக்களில், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் அளவுகள் சார்ந்த வகையிலான பிறழ் கூற்றுக்கள் இல்லை என்பது தொடர்பாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றினை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகம் அவர்களின் அறிக்கையினை வழங்குதல் என்பன எனது நோக்கமாகும். நியாயமான வகையில் உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாகும் எனினும், இலங்கையின் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது இது எப்பொழுதும் அளவுகள் சார்ந்த தவறான கூற்றுக்கள் அற்றதாக உள்ளது என்பதனை உறுதிப்படுத்துவதாக இல்லாமல் இருக்கும். மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தினை ஏற்படுத்துவதனால் அளவுகள் சார்ந்த தவறான கூற்றுக்கள் ஏற்பட முடியும் என்பதுடன், அதன் பொருண்மையான தன்மை மேற்படி நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பரிசீலிப்பவர்களினால் மேற்கொள்ளப்படும் பொருளாதார தீர்மானங்களில் பாதிப்புச் செலுத்தக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் தொழில் சார் நியாயத் தீர்ப்பு மற்றும் தொழில்சார் ஐயப்பாட்டுடன் இலங்கையின் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டது. மேலும்,

- தெரிவிக்கப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களின் ஆபத்துக்களை அடையாளம் காணும்போது மற்றும் மதிப்பீடு செய்யும் போது சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் பொருத்தமான கணக்காய்வு நடைமுறை ஒழுங்கு விதிகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. தவறாக முன்வைத்தல் காரணமாக ஏற்படும் அளவுகள் சார் பொய்யான கூற்றுக்களினால் ஏற்படும் தாக்கத்திலும் பார்க்க மோசடிகளினால் ஏற்படும் தாக்கம் ஆதிக்கம் கூடியது என்பதுடன், ஏமாற்றுக் கூட்டுச்சக்தி, போலியான ஆவணங்களைத் தயாரித்தல், உள்நோக்குடன் புறக்கணித்தல், தவறாக முன்வைத்தல் அல்லது உள்ளக நிர்வாகங்களைப் புறக்கணித்தல் என்பன மோசடிகள் ஏற்படக் காரணங்களாக அமையும்.

- உள்ளக நிருவாகத்தின் விளைதிறன் தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாவிடினும், சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக நிருவாகம் தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உட்பட நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் என்பவற்றிற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் என்பன பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதனை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமானதாகவும் நியாயமானதாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளக நிருவாகப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கின்றேன்.

1.6 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கருத்துக்களை முன்வைத்தல்

1.6.1 நிதி அல்லாத சொத்துக்கள்

(அ) ஹம்பாந்தோட்டை பிராந்தியப் பொறியியலாளர் அலுவலகம் அமைந்துள்ள காணியின் உரித்தினை ஒப்படைக்கும் சான்றிதழ் 2022 ஆம் ஆண்டில் திணைக்களத்திற்குக் கிடைக்கப்பெற்று இருந்த போதிலும், அதனை மதிப்பீடு செய்து நிதி அல்லாத சொத்துக்களாக கணக்கில் சேர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. இதன் காரணமாக திணைக்களத்தின் நிதி அல்லாத சொத்துக்கள் மேற்படி பெறுமதியினால் குறைத்துக் காட்டப்பட்டு இருந்தது.

(ஆ) உரித்து திணைக்களத்திடம் இல்லாத 0.7941 ஹெக்ரயார் அளவிலான மாத்தறை, மொரட்டுவை மற்றும் கொடவாய பிரதேசங்களில் அமைந்துள்ள 03 காணிகள் ரூ. 42,007,000 தொகைக்கு மதிப்பீடு செய்து நிதி நிலைமை தொடர்பான கூற்றில் நிதி அல்லாத சொத்துக்களின் கீழ் குறிப்பிடப்பட்டு இருந்தது. இதன் காரணமாக நிதி அல்லாத சொத்துக்கள் மேற்படி பெறுமதியினால் மிகை மதிப்பீடு செய்யப்பட்டு இருந்தது.

(இ) திணைக்களத்தில் காணப்படும் 08 மோட்டார் சைக்கிள்களின் பெறுமதியினை மதிப்பீடு செய்து மீளாய்வு செய்யப்பட்ட வருடத்தின் இறுதி வரை நிதி அல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கில் சேர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கவில்லை. அவற்றுள் 02 மோட்டார் சைக்கிள்கள் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்குள் எந்தவொன்றினையும் கணக்கில் சேர்க்காது கழித்து ஒதுக்கப்பட்டு இருந்ததுடன் இன்னும் ஒரு மோட்டார் சைக்கிள் தொலைந்து போய் இருந்தது.

(ஈ) கருத்திட்ட வேலைகளுக்காக மொரட்டுவை மற்றும் நீர்கொழும்பு பிராந்தியப் பொறியியலாளர் அலுவலகங்களுக்கு இணைக்கப்பட்டு உள்ள நான்கு இயந்திர உபகரணங்களின் பெறுமதியினை மதிப்பீடு செய்து நிதி அல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கில் சேர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. அதன் காரணமாக நிதி நிலைமை தொடர்பான கூற்றில் நிதி அல்லாத சொத்துக்களின் பெறுமதி குறைவாகக் குறிப்பிடப்பட்டு இருந்தது.

(உ) மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் நிதி அல்லாத சொத்துக்கள் தொடர்பான ஏசீஏ 06 மாதிரிப் படிவத்தின் பிரகாரம், நிர்மாணப் பொருட்கள் மற்றும் போக்குவரத்து உபகரணங்களின் இறுதியான மீதிகள் முறையே ரூ. 140,290,875 தொகை மற்றும் ரூ. 141,940,000 தொகை என்ற வகையில் குறிப்பிடப்பட்டு இருந்த போதிலும், கணக்காய்விற்காக முன்வைக்கப்பட்ட அட்டவணைகளுக்கு அமைய மேற்படி பெறுமதிகள் முறையே ரூ. 139,500,000 மற்றும் ரூ. 145,000,000 தொகை ஆகக் காணப்பட்டமையினால் முறையே ரூ. 790,875 தொகை மற்றும் ரூ. 3,460,000 தொகை வேறுபாடு ஒன்று அவதானிக்கப்பட்டது.

1.6.2 நிதிச் சொத்துக்கள்

2024 டிசம்பர் 31 ஆம் திகதியன்று கட்டுநிதிக் கணக்கு தொடர்பான கூற்றில் ஏசீஏ 3 மாதிரிப் படிவத்தின் பிரகாரம் ஈடுசெய்யப்படாத கட்டுநிதி மீதி என்ற வகையில் நிலவும் ரூ. 1,023,108 தொகை ஆகிய தேர்தல் திணைக்களத்தில் இருந்து கிடைக்கப்பெற வேண்டிய தொகை, நிதி நிலைமை தொடர்பான கூற்றில் நிதிச் சொத்துக்கள் என்ற வகையில் குறிப்பிடப்பட்டு இருக்கவில்லை. இதன் காரணமாக மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதியில் மொத்த சொத்துக்களின் மீதி மற்றும் திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய தேறிய சொத்துக்களின் மீதி மேற்படி பெறுமதியினால் குறைவாகக் குறிப்பிடப்பட்டு இருந்தது.

௨. ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1) (ஈ) (iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டு உள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்தியங்குகின்றன.

(ஆ) கடந்த ஆண்டிற்குரிய வகையில் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்கவில்லை.

கடந்த வருடத்திற்கு உரிய அறிக்கையின் பந்திகளுக்கான முன்னளிப்பு	நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்காத பரிந்துரை	இந்த அறிக்கையின் பந்திகளுக்கான முன்னளிப்பு
1.6.4 (ஆ)	கடந்த ஆண்டிற்குள் ஹம்பாந்தோட்டை பிராந்தியப் பொறியியலாளர் அலுவலகம் அமைந்துள்ள காணியின் உரித்தினை ஒப்படைக்கும் சான்றிதழ் கிடைக்கப்பெற்று இருந்த போதிலும் அதனை மதிப்பீடு செய்து மேற்படி பெறுமதியினை நிதி அல்லாத சொத்துக்களாக கணக்கில் சேர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டி இருந்தமை.	1.6.1 (அ)
1.6.4 (ஈ)	உரித்து திணைக்களத்திடம் காணப்படாத போதிலும் கடந்த ஆண்டுகளின் நிதி நிலைமை தொடர்பான கூற்றில் நிதி அல்லாத சொத்துக்களின் கீழ் ரூ.42,007,000 தொகைக்கு மதிப்பீடு செய்து குறிப்பிடப்பட்டு உள்ள 0.7941 ஹெக்ரயார் அளவிலான மாத்தறை, மொரட்டுவை மற்றும் கொடவாய ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள 03 காணிகளின் உரித்தினை திணைக்களத்திற்குப் பெற்றுக் கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டி இருந்தமை.	1.6.1 (ஆ)
1.6.4 (உ)	திணைக்களத்திற்கு உரித்தாகக் காணப்படும் சகல மோட்டார் சைக்கிள்களையும் மதிப்பீடு செய்து சரியான பெறுமதிகளை கணக்கில் சேர்க்கப்பட வேண்டி இருந்தமை.	1.6.1 (இ)
1.6.4 (எ)	கருத்திட்டப் பணிகளுக்காக மொரட்டுவை மற்றும் நீர்கொழும்பு பிராந்தியப் பொறியியலாளர் அலுவலகங்களுக்கு இணைக்கப்பட்டு உள்ள நான்கு இயந்திர உபகரணங்களின் பெறுமதியினை மதிப்பீடு செய்து நிதி அல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கில் சேர்க்கப்பட வேண்டி இருந்தமை.	1.6.1 (ஈ)

३. நிதி மீளாய்வு

3.1 வருமான முகாமைத்துவம்

(அ) லங்கா மினரல் சேன்ட்ஸ் லிமிடட் நிறுவனத்திற்கு 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 டிசம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரங்களின் மூலம் அனுமதிக்கபட்ட மணல் கியூப் அளவினைத் தாண்டி மேலதிகமாக மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளுக்காக அறவிடப்பட வேண்டிய தொகையாகிய ரூ. 79,369,500 தொகை ஆகக் காணப்பட்டது. எனினும் லங்கா மினரல் சேண்ட் லிமிடட் நிறுவனத்தினால் ரூ. 64,059,000 தொகை மாத்திரம் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய தொகையாகக் கணிப்பிடப்பட்டு இருந்தது. எவ்வாறெனினும் செலுத்தப்பட வேண்டிய மொத்த தொகையில் நூற்றிற்கு 24 வீதமாகிய ரூ. 19,285,700 தொகை மாத்திரம் 2024 ஆம் ஆண்டின் இறுதியாகும் போது செலுத்தப்பட்டு இருந்தது. திணைக்களத்தின் ஆவணங்களுக்கு அமைய, தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டியுள்ள தொகை ரூ. 60,083,800 தொகையினை அறவிடுவதற்கு எந்தவொரு எழுத்து மூல இணக்கப்பாடு ஒன்றினையோ அல்லது ஒப்பந்தம் ஒன்றினையோ மேற்கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

3.2 செலவின முகாமைத்துவம்

மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் வாகனங்களின் பராமரிப்புக்கள், வன்பொருட்களின் பராமரிப்புக்கள், கட்டிடங்களின் பராமரிப்புக்கள் மற்றும் மறுசீரமைப்பு என்பவற்றிற்காக ஒதுக்கப்பட்டு இருந்த மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்ட தேறிய ஒதுக்கீட்டில் இருந்து முறையே ரூ. 4,194,946 ஆகிய நூற்றிற்கு 49, ரூ. 733,246 தொகை ஆகிய நூற்றிற்கு 73 மற்றும் ரூ. 908,291 தொகை ஆகிய நூற்றிற்கு 61 என்பன எஞ்சிக் காணப்பட்டன. அவ்வாறெனினும், வாகனங்களின் குழாமில் காணப்பட்ட 09 வாகனங்களின் பழுதுபார்த்தல்கள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் தொடர்ந்தும் நிலவியமை, அனுமதிப்பத்திர வருமான முத்திரை பதிப்பிற்காக வருடாந்தக் கட்டணங்களைச் செலுத்த வேண்டி இருந்தமை, கணினிகளுக்காக வைரஸ் கார்ட்களின் தேவைப்பாடுகள் நிலவியமை மற்றும் தொடர்ந்தும் பழுதுபார்க்கப்பட வேண்டிய நிலையிலான கட்டடங்கள் என்பன காணப்படும் போது அதற்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தி இருக்கவில்லை.

3.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு முன்வருதல்

(அ) மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டு உள்ள, ஆண்டு இறுதி கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றிற்கு அமைய எந்தவொரு கடப்பாடு ஒன்றோ அல்லது பொறுப்பு ஒன்றோ அறிக்கையிடப்பட்டு இருக்காத போதிலும், திறைசேரி அச்சுப்பதிப்பு பிரதியின் எஸ்ஏ 92 இன் பிரகாரம் 3 செலவின விடயங்களின் மொத்தம் ரூ. 218,073 தொகை ஆகிய பொறுப்புக்கள் நிலவியதுடன் திணைக்களத்தில் 2025 ஆம் ஆண்டின் சனவரி, பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களின் வவுச்சர் பத்திரங்களைப் பரீட்சிக்கும் போது 10 செலவின விடயங்களுக்கு உரிய வகையில் மொத்தம் ரூ. 3,818, 244 தொகை ஆகிய 2024 ஆம் ஆண்டின் செலவுகளுக்காக 2025 ஆம் ஆண்டில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டு இருந்தமையின் மூலம் மொத்தம் ரூ. 4,036,317 தொகை அறிக்கையிடப்படாத பொறுப்புக்கள் காணப்பட்டன.

(ஆ) நி.ஒ. 94 (1) இற்கு முரணான வகையில் 2024 டிசம்பர் 31 ஆம் திகதியன்று ஐந்து செலவின விடயங்களின் மதிப்பீடு செய்யப்பட்ட ஒதுக்கீடுகளின் மீதியினைத் தாண்டி மொத்தம் ரூ. 2,473462 தொகைப் பொறுப்புக்களுக்கு முன்வந்து இருந்தது.

3.4 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய திணைக்களத்தின் நிதி நிருவாகத்திற்காக பயனுறுதியுடைய உள்ளக நிருவாகக் கட்டமைப்பு ஒன்றினைத் தயாரித்து பேணி வருவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்தல் வேண்டும் என்பதுடன் மேற்படி கட்டமைப்பின் பயனுறுதி தொடர்பில் அவ்வப்போது மீளாய்வினை மேற்கொண்டு அதற்கு அமைய கட்டமைப்பினை பயனுறுதியுடைய வகையில் பேணி வருவதற்குத் தேவையான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும் எனவும், மேற்படி மீளாய்வுகளை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதி ஒன்றினை கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும் எனினும், அவ்வாறான மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டமை தொடர்பான கூற்றுக்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டு இருக்கவில்லை.

3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு ஒத்திசையாமை

சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகளுக்கான முன்னளிப்பு	ஒத்திசையாமை
(அ) 1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க கரையோரப் பாதுகாப்புச் சட்டத்தின் 31 (4) ஆம் பிரிவு	2015 முதல் 2024 டிசம்பர் 31 ஆம் திகதி வரை உடைத்து அகற்றுவதற்கான கட்டளைகள் வழங்கப்பட்டு இருந்த அத்துமீறிய நிர்மாணிப்புக்களை அகற்றுவதற்காக திணைக்களத்திற்கு அறவிடப்பட வேண்டிய ரூ.3,492,801 தொகையினை அறவிட்டுக் கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.
(ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதி ஒதுங்குவிதிகள் கோவையின் நிதி ஒழுங்குவிதி 214	தேவையான விரிவான தகவல்கள் உள்ளடக்கப்பட்ட வகையில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான ஆவணம் ஒன்று பேணி வரப்பட்டு இருக்கவில்லை.
(இ) 2016 டிசம்பர் 29 ஆம் திகதிய மற்றும் 30/2016 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றுநிருபத்தின் 3.1 ஆம் பந்தி	திணைக்களத்தின் 33 வாகனங்கள் மற்றும் 18 இயந்திரங்கள் தொடர்பில் சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எரிபொருள் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.
(ஈ) திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அவர்களின் 2020 நவெம்பர் 09 ஆம் திகதிய மற்றும் TOD/REV/M3/02/01 ஆம் இலக்கக் கடிதம்	திறைசேரிச் செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகம் அவர்கள் கணக்கீட்டு உத்தியோகத்தராக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வருமானக் குறியீட்டு இலக்கங்களின் கீழ் சேகரிக்கப்படும் வருமானங்கள் தொடர்பாக உரிய கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் ஆண்டின் அரை இறுதியில் வருமானங்கள் தொடர்பான நிலுவை வருமான அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும் எனினும் 2019,2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் ஐந்து மீன்பிடித் துறைமுகங்களில் இருந்து மணலினை அகற்றுவதற்கான அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்காக அறவிடப்பட வேண்டிய ரூ. 8,268,292 தொகை நிலுவை வருமானத்தினை அறிக்கையிடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளாது அதற்காக எந்தவொரு நிலுவை வருமானமும் இல்லை என அறிக்கையிடப்பட்டு இருந்தது.

3.6 வேறு அமைச்சுக்களின் கீழ் வழங்கப்பட்ட ஒதுக்கீடுகள்

அம்பாறை மாவட்டத்தின், கல்முனை Groyne கட்டமைப்புக்கள் நிர்மாணிப்பதற்காக 46.99 மில்லியன் ரூபா தொகை மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டு இருந்ததுடன் அதனை 2024 ஆகஸ்ட் 01 ஆம் திகதி முதல் டிசம்பர் 31 ஆம் திகதி வரை 05 மாத காலத்திற்குள் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டு இருந்தது. அதற்கான நிதி ஒதுக்கீடு சனாதிபதி செயலகத்தினால் வழங்கப்பட்டு இருந்தது எனினும் அதன் பௌதீக செயலாற்றுகை நூற்றிற்கு 40 வீத மட்டம் ஒன்றிலும் மற்றும் அதன் நிதிச் செயாலற்றுகை ரூ.மி. 0.26 தொகை ஆகிய நூற்றிற்கு 16.17 ஆகிய மிகவும் குறைந்த ஒரு மட்டத்திலும் காணப்பட்டது.

4 செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றுகை

4.1.1. தொலை நோக்கு மற்றும் செயற்பணி

(அ) 1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவச் சட்டத்தின் 7 (உ) மற்றும் 12 ஆம் பிரிவு மற்றும் 2018 ஆம் ஆண்டில் திருத்தம் செய்யப்பட்ட ஆலோசகர் சபையினால் அனுமதிக்கப்பட்ட கரையோர முகாமைத்துவத் திட்டத்தின் 6.4.6 ஆம் பந்தியின் பிரகாரம் ஆலோசகர் சபைக்கு அனுமதிப்பத்திரங்களை வழங்கும் அதிகாரம் ஒன்று காணப்படுவதில்லை என்பதுடன் பொது நடவடிக்கைகளுக்காக அன்றி பின்னடைவுப் பிரதேசத்தில் இருந்து விடுவிப்புப் பெற்று தனிப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான பரிந்துரைகளை வழங்கும் அதிகாரம் ஒன்றும் காணப்படுவதில்லை. மேலும் அபிவிருத்திப் பணிக்காக வேறு மாற்றுவழி ஒன்று இல்லாத சந்தர்ப்பத்தில் மாத்திரம் நிர்மாணிப்புக்கள் அற்ற பிரதேசம் ஒன்றாகிய “ஒதுக்கப்பட்ட பிரதேசம்” பொதுமக்களின் பிரத்தியேகம் அல்லாத பொது அபிவிருத்திப் பணிகளுக்காக மாத்திரம் கரையோரப் பின்னடைவுப் பிரதேசத்தில் இருந்து விடுவித்தலை அனுமதித்தல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அவர்களினால் மேற்கொள்ள முடியும். அவ்வாறெனினும் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் நடாத்தப்பட்ட 04 ஆலோசகர் சபைக் கூட்டத் தொடர்களில் ஒதுக்கப்பட்ட பிரதேசங்களில் நிர்மாணிப்புக்களுக்காக எதிர்ப்பு ஏதும் இல்லை நிர்மாணிப்புக்களுக்காக எதிர்ப்பு ஏதும் இல்லை என 343 பிரத்தியேக விண்ணப்பங்களுக்காக அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டு இருந்தமையினால் அனுமதிப்பத்திரம் ஒன்றினை வழங்குவதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட கரையோர வலயத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளின் மூலம் ஏற்படும் பாதிப்பான விளைவுகளைத் தடுத்தல் அல்லது குறைத்தல் எனும் நோக்கம் நிறைவேறி இருக்கவில்லை.

(ஆ) மிரிஸ்ஸ பண்டரமுல்ல பிரதேசத்தில் 120 மீற்றர் நீளமான உடற்பயிற்சி நடை பாதை ஒன்றினை நிர்மாணித்தல் மற்றும் கரையோரப் பாதுகாப்பு அணைக்கட்டு ஒன்றினை நிர்மாணித்தல் என்பவற்றிற்காக ரூ. மி. 7 தொகை நிதி ஒதுக்கீடுகள் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்குள் வழங்கப்பட்டு இருந்தன. அவ்வாறெனினும் ஆண்டின் இறுதியில் அதன் நிதி மற்றும் பௌதீக செயலாற்றுகை பூச்சியப் பெறுமதி ஒன்றினைக் கொண்டு இருந்ததுடன் உடற்பயிற்சி நடை பாதை ஒன்றினை நிர்மாணித்தல் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் இலக்குகளுக்கு புறம்பான செயற்பாடு ஒன்றாகக் காணப்பட்டது.

4.1.2. திட்டமிடல்

மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்காக முன்வைக்கப்பட்ட செயலாற்றுகைத் திட்டத்தில் ரூ.மி. 21 தொகை ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டு இருந்த 05 செலவின விடயங்களின் அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கும் பௌதீக மற்றும் நிதிச் செயலாற்றுகைகள் குறிப்பிடப்பட்டு இருக்கவில்லை.

4.1.3. கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றாமை

2024 ஆம் ஆண்டின் செயலாற்றுகைத் திட்டத்திற்கு அமைய ஆண்டிற்குள் ரூ. 16.5 மில்லியன் தொகை ஒதுக்கீட்டின் கீழ் பூர்த்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டு இருந்த மாத்தறை மடிஹ பிரதேசத்தில் கரையோரப் பாதுகாப்புக் கட்டிடக்கலை ஒன்றினை நிர்மாணித்தல், 2021 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த மாத்தறை, மிரிஸ்ஸ, பண்டாரமுல்ல பிரதேசத்தில் அணைக்கட்டு ஒன்றினையும் மற்றும் உடற்பயிற்சி நடை பாதை ஒன்றினையும் நிர்மாணித்தல் மற்றும் திருகோணமலையில் நிரந்தர தாவரங்களின் நிரலினை அடையாளம் இடுதல் என்பன தொடர்பான மதிப்பாய்வுகள் ஆகிய பணிகள் நிறைவேற்றப்பட்டு இருக்கவில்லை.

4.1.4. எதிர்பார்க்கப்பட்ட முடிவு மட்டத்தினைப் பெற்று இருக்காமை

(அ) முன்வைக்கப்பட்ட செயலாற்றுகை அறிக்கைக்கு அமைய மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டு இருந்த மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூ. மி. 52.52 தொகையாகிய புத்தளம் வடக்கு உடப்புவ பிரதேசத்தில் 200 மீற்றர் அளவினைக் கொண்ட அணைக்கட்டு ஒன்றினை (Revetment) நிர்மாணித்தல், காலி ஹுதபலான 30 மீற்றர் நீளத்தினைக் கொண்ட க்ரொய்ன் (Groyne) கட்டமைப்பு நிர்மாணித்தல் மற்றும் அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில், விஸ்கி பொய்ன்டில் Geobag Groyne கட்டிடக்கலையினை நிர்மாணித்தல் ஆகிய 03 கருத்திட்டங்களின் பௌதீகச் செயலாற்றுகை நூற்றிற்கு 20 வீதத்திலும் பார்க்க குறைந்த மட்டம் ஒன்றில் நிலவியதுடன் அதன் நிதிச் செயலாற்றுகையும் நூற்றிற்கு 12 வீதத்திலும் பார்க்க குறைவான மட்டம் ஒன்றில் காணப்பட்டது.

(ஆ) 2012 முதல் 2024 டிசம்பர் 31 வரை இலங்கையின் கடற்கரையோரங்களில் பின்னடைவுப் பிரதேசங்களுக்குள் அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளாமல் மேற்கொள்ளப்பட்டு உள்ள நிர்மாணிப்புக்களுக்காக உடைத்து அகற்றும் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டு இருந்த 3,039 அத்துமீறிய நிர்மாணிப்புக்களுள் 2,825 நிர்மாணிப்புக்களை அகற்றுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

4.2 சொத்து முகாமைத்துவம்

(அ) நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டு உள்ள பெறுமதி ரூ. 11.9 மில்லியன் தொகையாகிய Volvo Excavator இயந்திரம் பல ஆண்டு காலமாக பயன்படுத்தப்படாமல் காலி அலுவலக வளாகத்தில் உக்கிய நிலையில் காணப்பட்டதுடன் கழித்து ஒதுக்குவதற்காக 2021 ஆம் ஆண்டில் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு இருந்த போதிலும் மேற்படி இயந்திரத்தினைக் கழித்து ஒதுக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

(ஆ) மொரட்டுவைப் பிராந்திய அலுவலகத்தில் Hyundai 320LC – 9 crawler Excavator இயந்திரம் நீண்ட காலமாக பயன்படுத்தப்படாது நிறுத்தி வைத்திருந்தமையின் காரணமாக ஓட்ட முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டு இருந்தது எனினும் இது தொடர்பாக பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களின் கவனம் கோரப்பட்டு இருக்கவில்லை.

(இ) 2005 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டது எனினும் கணக்கில் சேர்க்கப்படாமல் பயன்படுத்தப்பட்ட திணைக்களத்திற்கு உரித்தான மோட்டார் சைக்கிள் ஒன்று காணாமல் போயிருந்தது. மேலும், மோட்டார் சைக்கிள்களுக்காக 2015 ஆம் ஆண்டின் பின்னர் அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை என்பதுடன் காணாமல் போனமை தொடர்பில் இந்த அறிக்கையில் தினம் குறிப்பிட்டு எந்தவொரு விசாரணையும் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

4.3 முகாமைத்துவப் பலவீனங்கள்

(அ) உனவட்டுன பிரதேசத்தின் ஹோட்டல் ஒன்றின் நிர்மாணிப்பு தொடர்பிலான பரீட்சிப்பின் போது காலி மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு இருந்த பாகப்பிரிவு வழக்கு ஒன்றின் பிரகாரம் 1924 ஆம் ஆண்டு பெப்ரவரி 09 ஆம் திகதி பிரித்து வேறாக்கப்பட்ட 9 யு திட்ட வரைபடத்தின் 06 காணித் துண்டுகளில் உள்ளடக்கப்பட்டு உள்ள காணியின் அளவு 122.69 பேர்சஸ் அளவினைக் கொண்டிருந்த போதிலும் 2018 ஏப்பிறல் 30 ஆம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட திட்ட வரைபடத்தின் பிரகாரம் மேற்படி 06 காணித் துண்டுகளின் அளவு 156.11 பேர்சஸ்களாக காணப்பட்டமையினால் அதிகரித்து இருந்த 33.42 பேர்சஸ் அளவு கடற் கரையினை சட்ட விரோதமான முறையில் மீட்பு செய்துள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) மேற்படி காணியின் முன்னாள் உரிமையாளர் என்பவர்கள் கடற்கரையோரத்தில் இருந்து 18.3 மீற்றர் அளவு தூரத்தில் அத்துமீறிய வகையில் நிர்மாணிக்கப்பட்டு இருந்த கிட்டத்தட்ட 21.9 அடி நீளம் மற்றும் 05 அடி உயரம் அளவிலான அணைக்கட்டினை, சட்டத்தின் 31 (2) ஆம் பிரிவின் கீழ் உடைத்து அகற்றுவதற்கு 2016 ஆம் ஆண்டு நவெம்பர் 09 ஆம் திகதி கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அவர்களினால் கட்டளை ஒன்று இடப்பட்டு இருந்த போதிலும், அதனைப் புறக்கணித்து ஹபராதுவ பிரதேச செயலாளரின் கடிதத்தின் மூலம், அரித்து செல்வதனைத் தடுப்பதற்காக கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் பரிந்துரையின் கீழ் அணைக்கட்டினை நிர்மாணிப்பதற்காக காணியின் தற்போதைய உரிமையாளருக்கு அனுமதி வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருந்தன.

5 நிலையான அபிவிருத்தி

5.1 நிலையான அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றுவதன் முன்னேற்றம்

பாதகமான மானிடத் தாக்கங்களைத் தடுப்பதற்காக சமுத்திரங்கள் மற்றும் கரையோரச் சுற்றாடல் கட்டமைப்புக்களை நிலையான வகையில் பாதுகாத்தல் எனும் இலக்கின் கீழ் பாதிப்பிற்கு உட்பட்ட பிரதேசங்களை அடையாளம் கண்டு முகாமை செய்தல் மற்றும் பாதுகாத்தல் என்பவற்றிற்காக மணல் மேடுகள், கண்டல் மற்றும் உப்புச் சகதி நிலங்கள் மற்றும் கூருணர்வான சுற்றாடல் கட்டமைப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 70 ஹெக்ரயார் அளவினைப் பாதுகாத்தல் எனும் இலக்கினை அடைந்திருக்காமை.

6. மனித வள முகாமைத்துவம்

6.1 இணைக்கப்பட்டு உள்ள பதவியணி, உண்மையான பதவியணி

2024 டிசம்பர் 31 ஆம் திகதியன்று திணைக்களத்தின் 541 ஆகக் காணப்பட்ட அனுமதிக்கப்பட்ட பதவியணியில் 150 பதவிகள் வெற்றிடமாக உள்ளதுடன் இவற்றுள் சிரேஷ்ட மட்டத்திலான 15 பதவிகளும், மூன்றாம் நிலை மற்றும் இரண்டாம் நிலை மட்டங்களுக்குரிய 75 பதவிகளும் மற்றும் ஆரம்ப நிலை மட்டத்திலான 60 பதவிகளும் உள்ளடக்கப்பட்டு இருந்தன. மேலும், அனுமதிக்கப்பட்ட 90 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள் காணப்பட்ட போதிலும், உண்மையான எண்ணிக்கை 104 ஆகக் காணப்பட்டமையால் 14 மேலதிகமாகக் காணப்பட்டன. மேலும், ஒரு பதவி மாத்திரம் அனுமதிக்கப்பட்டு உள்ள சிரேஷ்ட மற்றும் முன்றாம் நிலை அட்டத்திலான 03 பதவிகளின், எந்தவொரு உத்தியோகத்தரும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு இருக்கவில்லை. அதற்கு அமைய உண்மையான வகையில் நிலவும் பதவிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் கடமை நடவடிக்கைகளைப் பேணி வரும் ஆற்றல் தொடர்பில் மீளாய்வு செய்து தேவைப்பாட்டிற்கு அமைய திருத்தங்களை மேற்கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

ஆர்.எம்.எம்.எஸ். பெரேரா
சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் நாயகம்
கணக்காய்வாளர் நாயகம் சார்பில்.

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைக் குறிகாட்டிகள் (செயலாற்றுகைத் திட்டத்திற்கு அமைவாக)

விஷேடமான குறிகாட்டிகள்	எதிர்பார்க்கப்பட்ட முடிவுகளின் சதவீதமாக (%) உண்மையான முடிவு		
	100% -90%	75% - 89%	50% -74%
திரண்ட மற்றும் பாதுகாக்கப்பட்ட கரையோரப் பகுதியின் நீளம்	81%		
வளப்படுத்தப்பட்ட கடற்கரையோரத்தின் நீளம்			0%
சுத்தம் செய்யப்பட்ட கடற்கரையோரத்தின் நீளம்	100%		
பாதுகாக்கப்பட்ட மற்றும் கூருணர்வான நிலப் பிரதேசம்			0%
கண்டல் தாவர வரிசையினை மறுசீரமைத்தல்	100%		
கரையோர நீரின் நிலைமையினைாி 8 இலும் அதிகமானதா எனப் பரீட்சித்தல்	100%		
வழங்கப்பட்ட ஈ-அனுமதிப்பத்திரங்கள்	100%		
சுற்றாடல் சார் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள்	100%		

அத்தியாயம் 05 - முன்னெடுத்துச் செல்லக்கூடிய நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

5.1 அடையாளம் காணப்பட்ட சம்பந்தப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்கு (SDG)

நிறுவன நோக்கத்துக்கு அமைய இலக்கு	நடவடிக்கை	“ வெற்றி பற்றிய குறிகாட்டி “	2024 இலக்கு	2024 முன்னேற்றம்	% 0- 49	%50 - 74	% 75 - 100	SDGகட்டமைப்புக்குள் வழங்கப்பட்டுள்ள தொடர்பான கொள்கையின் ,லக்கு
இலக்கு - 13 காலநிலை மாற்றம் மற்றும் அதன் விளைவுகளுக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுத்தல்								
1. காலநிலை தொடர்பான கடலோர பேரழிவுகளின் பாதகமான விளைவகளைத் தடுத்தல் மற்றும் கணிசமாக குறைத்தல்.	1.1 கரையோர பாதுகாப்பு கட்டமைப்பு நிர்மாணம் 1.2 செயற்கை மணல் ஊட்டல் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தல். 1.3. சதுப்பு நிலப் பகுதிகளின் புனரமைப்பு	அ. பயனுள்ள பாதுகாப்பான கரையோர நீளம் ஆ. செயற்கை மணல் ஊட்டம் கடற்கரை நீளத்தை உறுதிப்படுத்தியது. க. செய்கையிடப்பட்ட அளவு	3500m 0 1000m2	2831m 0 2400m2	0		81 100	13.1 சகல நாடுகளின் காலநிலை தொடர்பான ஆபத்துக்கள் மற்றும் இயற்கை பேரழிவுகளை தாங்கும் திறன் மற்றும் மாற்றியமைக்கும் திறனை வலுப்படுத்தல்.
இலக்கு 14. நிலைபேறான அபிவிருத்திக்கு சமுத்திரம் மற்றும் சமுத்திர வளங்களை பாதுகாத்தல் மற்றும் உறுதியான பயன்பாடு.								
2. கடல் மாசடைதலைத் தடுத்தல் மற்றும் குறைத்தல் மற்றும் பல்வேறு இடங்களில் நீரின் தர அளவுருக்கள் (ph) குறித்த தரவுகளின் அளவீடு மற்றும் பரிமாற்றம்.	2.1. கரையோரம் சுத்தம் செய்யும் வேலைத் திட்டத்தை செயற்படுத்தல். 2.2.கரையோர நீரின் தர அளவுருக்களின் அளவீடு.	ஈ. சுத்தம் செய்யப்பட்ட ஒட்டுமொத்த கடற்கரை நீளம். உ. 2026 வரை சாதாரண வருடாந்த கரையோர நீரின் pH அளவு 8.0 க்கு மேல் உள்ளதா என்பதை பரிசீலனை செய்தல்.	2km 04 அளவுருக்கள் மற்றும் தரவு பரிமாற்றம்	20.6km 04 இடங்களில் அளவுருக்கள் அளவிடல் மற்றும் தரவு மாற்றம் பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளது.			100 100	14.1 2025ஆம் ஆண்டின்போது சமுத்திர குப்பைகள் மற்றும் ஊட்டச்சத்து மாசுபாடு உட்பட, முக்கியமாக நில அடிப்படையிலான செயற்பாடுகளிலிருந்து, அனைத்து வகையான கடல் மாசுபாடுகளையும் தடுத்தல் மற்றும் குறிப்பிடத்தளவு குறைவு.
3. ஆரோக்கிய வளம் மற்றும் உற்பத்தி திறனை பெற்றுக் கொள்வதற்கு அவற்றை புனரமைப்பு செய்வது உட்பட குறிப்பிடடத்தக்க மனித தாக்கங்ளைத் தடுப்பது மற்றும் கரையோர சூழல் தொகுதி நிலைபேறாக அபிவிருத்தி செய்தல், முகாமைத்துவம் செய்தல் மற்றும் பாதுகாத்தல்.	3.1. பாதகமான நிலைக்கு உள்ளான பிரதேசங்களை இனம் கண்டு முகாமைத்துவம் செய்தல்	இ. மணல் திட்டுக்கள், சதுப்பு நிலங்கள் மற்றும் உப்பு சதுப்பு நிலங்கள் மற்றும் உணர்திறன் சுற்றுச் சூழல் அமைப்புகளை பாதுகாத்தல்.	70 Hec	0	0			2020 ஆம் ஆண்டளவில், 14.5 தேசிய மற்றும் சர்வதேச சட்டங்களுக்கு இணங்கவும், கிடைக்கக்கூடிய சிறந்த அறிவியல் தகவல்களின் அடிப்படையில், கரையோர மற்றும் கரையோர பகுதிகளில் குறைந்தது 10 சதவீதத்தைப் பாதுகாக்கவும்.

5.2 நிலைபேறான அபிவிருத்தியின் நோக்குகளில் வெற்றி மற்றும் சவால்களை சுருக்கமாக குறிப்பிடவும்.

அடையாளம் காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இயன்றவரை அடைவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் இவற்றில் சில இலக்குகளை தரப்பனரான தரப்பினருடன் இணைந்து முன்னெடுக்கப்பட்டுள்ளது.

6.1 ஆளணி முகாமைத்துவம்

	அனுமதிக்கப்பட்ட ஆளணி	தற்போதைய ஆளணி	வெற்றிடங்கள் (மிகை)
சிரேஷ்ட நிலை	43	28	15
மூன்றாம் நிலை	04	01	03
இரண்டாம் நிலை	322	265	57
ஆரம்ப நிலை	172	112	60
மொத்தம்	**541**	**406**	**135**

6.2 மனிதவளப் பற்றாக்குறை அல்லது மிகை தாபனத்தின் செயலாற்றுகையில் தாக்கம் செலுத்தியுள்ள முறையினைச் சுருக்கமாகக் குறிப்பிடவும்.

1. பொறியியலாளர்கள், தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் கள உதவியாளர்களின் பற்றாக்குறை நிர்மாணிப்புக்கள் மேற்கொள்ளப்படும் இடங்களின் பௌதீக மற்றும் நிதிச் செயலாற்றுகைகளை அடைந்துகொள்வதில் பாதகமான விதத்தில் தாக்கம் செலுத்தியுள்ளது.

2. அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் (14) போன்ற சில வகையினரின் மிகையாக உள்ள ஆளணி தேவையற்ற நிதிச் செலவுகளுக்கு காரணமாக அமைவதுடன் நிதிச் செயலாற்றுகையின் வினைத்திறனினையும் குறைக்கின்றது.

6.3 மனித வள அபிவிருத்தி

நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர்	பயிற்றப்பட்ட பதவியணியினரின் எண்ணிக்கை	நிகழ்ச்சித்திட்டத்தின் காலப்பகுதி	மொத்த முதலீடு (ரூ.000.0)	நிகழ்ச்சித்திட்டத்தின் தன்மை (வெளிநாடு / உள்நாடு)	வெளியீடு / பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவு
விலைமனு கோரலுக்கான ஆவணங்களைத் தயாரித்தல் தொடர்பான பயிற்சி	01	2024.07.03-05	21	உள்நாட்டு	
அரச சம்பள முறைமை (Payroll) தொடர்பான பயிற்சி	01	2024.08.13-15	18	உள்நாட்டு	
அரச பெறுகை நடைமுறைகள் தொடர்பான சான்றிதழ் பாடநெறி	01	2024.06.14 ஆம் திகதி முதல் 10 வெள்ளிக்கிழமைகள்	40	உள்நாட்டு	
ஊக்குவித்தல் தொடர்பான நிகழ்ச்சித்திட்டம்	25	2024.10.22	142.5	உள்நாட்டு	
பதவியணியினருக்கு இடையில் நேர்மறை உளப்பாங்குகளை விருத்தி செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டம்	25	2024.10.23	142.5	உள்நாட்டு	
சீனாவின் தீவு நாடுகளின் சமுத்திர ஒன்றியம்	01	2024.11.04 - 05	29.2	வெளிநாட்டு	
அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் கரையோர வலயத்தில் சமுத்திரப் புவியியல் மதிப்பாய்வுகள் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பான கருத்தரங்கு	03	2024.08.29-09.13	88.4	வெளிநாட்டு	

6.4 தாபனத்தின் செயலாற்றுகையில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பங்களிப்புச் செய்த முறையினைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.

அவையாவன

1. பல்வேறு விடயங்கள் தொடர்பான இற்றைப்படுத்தப்பட்ட அறிவின் ஊடாக விளைதிறனை விருத்தி செய்தல்.
2. உளப்பாங்கு, தனியாள் ஆற்றல்கள் மற்றும் கூட்டுப்பொறுப்பு என்பவற்றினை விருத்தி செய்தல்.
3. ஊழியர்களின் சேவைத் தேவைப்பாட்டினை அடையாளம் கண்டு அவர்களுக்கு உற்பத்தி நிலையினை அடைந்து கொள்வதற்கான வசதிகளை வழங்குவதற்கு இயலுமாகியமை.
4. புதிய மற்றும் வினைத்திறனான அலுவலக முறைமைகளின் ஊடாக ஊழியர்களை ஊக்குவித்தல்.

அத்தியாயம் 07 - இணக்கப்பாட்டு அறிக்கை

இல.	தொடர்புபடுத்தப்பட வேண்டிய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கப்பாடானது/ இணக்கப்பாடற்றது)	இணக்கப்பாடற்றதாயின் அதற்கான சுருக்க விளக்கம்	இணக்கமின்மையினை எதிர்காலத்தில் தவிர்த்துக் கொள்வதற்காக முன்மொழியும் சீராக்கல் நடவடிக்கைகள்
1	**கீழே குறிப்பிடப்பட்டு உள்ள நிதிக் கூற்றுக்கள் / கணக்குகள் உரிய தினத்தில் சமர்ப்பிக்கப்பட்டு இருத்தல்**			
1.1	வருடாந்த நிதிக் கூற்றுக்கள்	ஒத்தியங்குகின்றது		
1.2	அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு	ஒத்தியங்குகின்றது		
1.3	வியாபார மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்குகள் (வணிக முற்பணக் கணக்கு)	ஏற்புடையதல்ல		
1.4	களஞ்சியசாலைகள் முற்பணக் கணக்கு	ஏற்புடையதல்ல		
1.5	விஷேட முற்பணக் கணக்கு	ஏற்புடையதல்ல		
1.6	ஏனையவை	ஏற்புடையதல்ல		
2	**ஏடுகள் மற்றும் ஆவணங்களைப் பராமரித்தல் (நி.பி.கு.445)**			
2.1	அரசாங்க நிருவாகச் சுற்றுநிருபம் 267/2018 இற்கு அமைய நிலையான சொத்துக்களுக்கு உரிய ஆவணத்தினை இற்றைப்படுத்திப் பேணி வருதல்	ஒத்தியங்குகின்றது		
2.2	ஆளுக்குரிய வேதனாதிகள் ஆவணம்/ ஆளுக்குரிய வேதனாதிகள் அட்டைகளை இற்றைப்படுத்திப் பேணி வருதல்	ஒத்தியங்குகின்றது		
2.3	கணக்காய்வு விசாரணைகள் ஆவணத்தினை இற்றைப்படுத்திப் பேணி வருதல்	ஒத்தியங்குகின்றது		
2.4	உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்குரிய ஆவணத்தினை இற்றைப்படுத்திப் பேணி வருதல்	ஒத்தியங்குகின்றது		
2.5	சகல மாதாந்த கணக்குகளினதும் பொழிப்பினைத் (CIGAS) தயாரித்து உரிய தினத்தில் பொதுத் திறைசேரிக்கு சமர்ப்பித்தல்	ஒத்தியங்குகின்றது		
2.6	காசோலைகள் மற்றும் காசுக் கட்டளைகள் ஆவணத்தினை இற்றைப்படுத்திப் பேணி வருதல்	ஒத்தியங்குகின்றது		
2.7	இன்வென்ட்ரி ஆவணத்தினை இற்றைப்படுத்திப் பேணி வருதல்	ஒத்தியங்குகின்றது		
2.8	மொத்த இருப்புக்களுக்குரிய ஆவணத்தினை இற்றைப்படுத்திப் பேணி வருதல்	ஒத்தியங்குகின்றது		
2.9	இழப்புக்கள் நட்டங்கள் தொடர்பான ஆவணத்தினை இற்றைப்படுத்திப் பேணி வருதல்	ஒத்தியங்குகின்றது		
2.10	பொறுப்புக்கள் தொடர்பான ஆவணத்தினை இற்றைப்படுத்திப் பேணி வருதல்	ஒத்தியங்குகின்றது		
2.11	உப பத்திரங்கள் ஆவணத்தினை இற்றைப்படுத்திப் பேணி வருதல்	ஒத்தியங்குகின்றது		
3	**நிதி நிருவாகத்திற்கான பணிகளை ஒப்படைத்தல் (நி.பி.கு 135)**			
3.1	நிதி சார் அதிகாரங்களைக் கொண்ட நிறுவனத்தின் உள்ளே அதிகாரங்களை ஒப்படைத்தல்	ஒத்தியங்குகின்றது		
3.2	நிதி சார் அதிகாரங்களை ஒப்படைத்தல் தொடர்பாக நிறுவனத்தின் உள்ளே அறிவூட்டி வைத்தல்	ஒத்தியங்குகின்றது		
3.3	ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலும் இரண்டு உத்தியோகத்தர்கள் அல்லது அதிலும் கூடியோருக்கு ஊடாக அனுமதிக்கப்படும் வகையில் அதிகாரங்களை ஒப்படைத்தல்	ஒத்தியங்குகின்றது		

3.4	2014.05.11 ஆம் திகதிய மற்றும் 171/2004 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்திற்கு அமைய, அரச சம்பள அட்டைகள் மென்பொருள் பக்கேஜினைப் பயன்படுத்தும் போது கணக்காளர் களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.	ஒத்தியங்குகின்றது		
4	வருடாந்தத் திட்டங்களைத் தயாரித்தல்			
4.1	வருடாந்த செயலாற்றுகைத் திட்டத்தினைத் தயாரித்தல்	ஒத்தியங்குகின்றது		
4.2	வருடாந்த பெறுகைகள் திட்டத்தினைத் தயாரித்தல்	ஒத்தியங்குகின்றது		
4.3	வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தினைத் தயாரித்தல்	ஒத்தியங்குகின்றது		
4.4	வருடாந்த மதிப்பீட்டினைத் தயாரித்து தேசிய வரவுசெலவுகள் திணைக்களத்திற்கு (NDB) உரிய தினத்தில் சமர்ப்பித்தல்	ஒத்தியங்குகின்றது		
4.5	வருடாந்த நிதிப் பாய்ச்சல் கூற்றினை உரிய தினத்தில் திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பித்தல்	ஒத்தியங்குகின்றது		
5	கணக்காய்வு விசாரணைகள்			
5.1	கணக்காய்வாளர் நாயகம் அவர்களினால் குறித்துரைக்கப்பட்டு உள்ள தினத்தில், சகல கணக்காய்வு விசாரணைகளுக்கும் பதில்களை வழங்கி இருத்தல்	ஒத்தியங்குகின்றது		
6	உள்ளகக் கணக்காய்வு			
6.1	நி.பி.கு 134(2) DMA/1-2019 அமைய, ஆண்டின் ஆரம்பத்தில் கணக்காய்வாளர் நாயகம் அவர்களுடன் கலந்துரையாடியதன் பின்னர், உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தினைத் தயாரித்தல்	ஒத்தியங்குகின்றது		
6.2	ஒவ்வொரு உள்ளகக் கணக்காய்வு அறிக்கைக்கும் ஒரு மாத காலப்பகுதிக்குள் பதில்களை வழங்கி இருத்தல்	ஒத்தியங்கவில்லை	பிராந்திய அலுவலகங்களில் இருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்ளல் காலம் செல்லும் ஒரு பணியாகும்.	சீர் செய்வதற்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.
6.3	2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 40 (4) உப பிரிவின் பிரகாரம் சகல உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளினதும் பிரதிகள் முகாமைத்துவ கணக்காய்வுகள் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டு இருத்தல்	ஒத்தியங்குகின்றது		
6.4	நிதிப் பிரமாணக் குறிப்பு 134 (3) இன் பிரகாரம், சகல உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளினதும் பிரதிகள் கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டு இருத்தல்.	ஒத்தியங்குகின்றது		
7	கணக்காய்வுகள் மற்றும் முகாமைத்துவக் குழு			
7.1	னுஆயு சுற்றுநிருபம் 1-2019 இற்கு அமைய, ஆகக் குறைந்தது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் 04 கூட்டமாவது உரிய ஆண்டிற்குள் நடாத்தப்பட்டு இருத்தல்.	ஒத்தியங்குகின்றது		
8	சொத்து முகாமைத்துவம்			
8.1	01/2017 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவச் சுற்றுநிருபத்தின் 07 ஆம் அத்தியாயத்திற்கு அமைய, சொத்துக்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் கழித்து ஒதுக்குதல் தொடர்பாக தகவல் கொம்ப்ட்ரோலர் நாயக அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டு இருத்தல்	ஒத்தியங்குகின்றது		
8.2	மேலே குறிப்பிடப்பட்டு உள்ள சுற்றுநிருபத்தின் 13 ஆம் அத்தியாயத்திற்கு அமைய, மேற்படி சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கான ஒருங்கிணைப்பினை மேற்கொள்வதற்காக பொருத்தமான ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் ஒருவரை நியமித்து மேற்படி உத்தியோகத்தர்	ஒத்தியங்குகின்றது		

	தொடர்பான தகவல்களை கொம்ப்ட்ரோலர் நாயக அலுவலகத்தில் அறிக்கை இடப்பட்டு இருத்தல்			
8.3	05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்திற்கு அமைய, பொருட்கள் கணக்கெடுப்பினை நடாத்தி உரிய அறிக்கைகளை உரிய தினத்தில் கணக்காய்வாளர் நாயகம் அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டு இருத்தல்.	ஒத்தியங்குகின்றது		
8.4	வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்பின் ஊடாக வெளிப்படுத்தப்பட்ட மிகை, குறைபாடுகள் மற்றும் ஏனைய பரிந்துரைகள் என்பன சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டு உள்ள காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டு இருத்தல்.	ஒத்தியங்குகின்றது		
8.5	கழித்து ஒதுக்கப்பட்ட பொருட்களை அகற்றுதல் நி.பி.கு 772 இற்கு அமைய மேற்கொள்ளல்	ஒத்தியங்குகின்றது		
9	**வாகன முகாமை**			
9.1	குலாமில் உள்ள வாகனங்களுக்காக நாளாந்த ஓட்டப் பதிவுகள் மற்றும் மாதாந்த சாராம்ச அறிக்கைகள் என்பன தயாரிக்கப்பட்டு உரிய தினத்தன்று கணக்காய்வாளர் நாயகம் அவர்களிடம் சமர்ப்பித்தல்.	ஒத்தியங்குகின்றது		
9.2	வாகனங்கள் கழித்து ஒதுக்கப்பட்டு 06 மாதங்களுக்கும் குறைவான காலப்பகுதி ஒன்றில் ஒதுக்கப்பட்டு இருத்தல்.	ஒத்தியங்கவில்லை	அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைய விற்பனை நடைமுறைகள் தாமதமாகி இருந்தன.	
9.3	வாகனங்களின் சம்பவத் திரட்டுப் புத்தகங்கள் பேணப்பட்டு அவை இற்றைப்படுத்தப்பட்டு பேணப்பட்டு வருதல்.	ஒத்தியங்குகின்றது		
9.4	ஒவ்வொரு வாகன விபத்து தொடர்பாகவும் நி.பி.கு. 103,104,109 மற்றும் 110 இன் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.	ஒத்தியங்குகின்றது		
9.5	30/2016 ஆம் இலக்க மற்றும் 2016.12.29 ஆம் திகதிய அரசாங்க நிருவாகச் சுற்றுநிருபத்தின் 3.1 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு அமைய வாகனங்களின் எரிபொருள் நுகர்வு தொடர்பில் மீள் பரிசோதனை மேற்கொள்ளல்.	ஒத்தியங்கவில்லை	போதியளவான எரிபொருள் செலவு ஒன்று இல்லாமையினால் அதனை மேற்கொள்ள முடியாமல் சென்றது.	அதனை 2025 ஆம் ஆண்டில் மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டு உள்ளது.
9.6	குத்தகை வாகனங்களின் குத்தகைக் காலம் பூர்த்தி அடைந்த பின்னர் அவற்றின் சம்பவத் திரட்டுப் புத்தகங்கள் முழு உரிமைக்கு மாற்றம் செய்யப்படல்.	ஏற்புடையதல்ல		
10	**வங்கிக் கணக்குகளின் முகாமை**			
10.1	உரிய தினத்தன்று வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டு அவை கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டு இருத்தல்.	ஒத்தியங்குகின்றது		
10.2	மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் அல்லது அதற்கு முன்னைய ஆண்டுகள் தொடக்கம் முன் கொண்டு வரப்பட்ட செயலிழந்த வங்கிக் கணக்குகள் சீர் செய்யப்பட்டு இருத்தல்.	ஒத்தியங்குகின்றது		
10.3	வங்கிக் கணக்கு இணக்கக் கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட மற்றும் சீராக்கல் செய்யப்பட வேண்டியிருந்த மீதிகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொண்டு மேற்படி மீதிகள் ஒரு மாத காலப்பகுதிக்குள் தீர்வு செய்யப்பட்டு இருத்தல்.	ஒத்தியங்குகின்றது		
11	**ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தல்**			
11.1	ஒதுக்கப்பட்டு இருந்த ஒதுக்கீடுகள் அவற்றின் வரையறையினை மீறி விடாத வகையில் செலவுகளை ஏற்றல்.	ஒத்தியங்குகின்றது		

11.2	நி.பி.கு.94(1) பிரகாரம் வழங்கப்பட்ட ஒதுக்கீடுகளின் மூலம் ஈடுபடுத்தப்பட்டதன் பின்னர் ஆண்டின் இறுதியில் எஞ்சியுள்ள ஒதுக்கீடுகளின் வரையறைகளைத் தாண்டாத வகையில் பொறுப்புக்களுக்கு முன்வருதல்.	ஒத்தியங்கவில்லை	2024 ஆம் ஆண்டில் தவிர்க்க முடியாத செலவுகளுக்காக போதியளவான ஒதுக்கீடுகள் வழங்கப்படவில்லை.	ஒதுக்கீட்டிற்குள் செலவுகளை ஈடுசெய்து கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உள்ளன
12	**அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள்**			
12.1	வரையறைகளுக்கு ஒத்தியங்குதல்	ஒத்தியங்குகின்றது		
12.2	நிலுவையாகக் காணப்பட்ட கடன் மீதிகள் தொடர்பாக காலப் பகுப்பாய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டு இருத்தல்	ஒத்தியங்குகின்றது		
12.3	ஒரு வருட காலத்திற்கும் மேலாக நிலவி வரும் நிலுவையாகக் காணப்பட்ட கடன் மீதிகள் தீர்த்து வைக்கப்பட்டு இருத்தல்.	ஒத்தியங்குகின்றது		
13	**பொது வைப்புக் கணக்கு**			
13.1	காலம் கடந்த வைப்புக்கள் தொடர்பாக நி.பி.கு. 571 இன் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருத்தல்.	ஒத்தியங்குகின்றது		
13.2	பொது வைப்புக்களுக்கு உரிய கட்டுப்பாட்டு ஆவணம் இற்றைப்படுத்தப்பட்டு பேணப்பட்டு வந்துள்ளமை	ஒத்தியங்குகின்றது		
14	**பணி முற்பணக் கணக்கு**			
14.1	மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதியில் காசேட்டின் மீதி திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டு இருத்தல்.	ஒத்தியங்குகின்றது		
14.2	நி.ஒ. 371 இன் பிரகாரம் வழங்கப்பட்ட குறிப்பிட்ட ஒரே பணிக்குரிய இடைக்காலக் கட்டுநிதி, மேற்படி பணி பூர்த்தியடைந்து ஒரு மாத காலத்திற்குள் தீர்த்து வைக்கப்பட்டு இருத்தல்.	ஒத்தியங்குகின்றது		
14.3	நி.ஒ. 371 இன் பிரகாரம் அனுமதிக்கப்பட்டு உள்ள வரையறையினைத் தாண்டிச் செல்லாத வகையில் குறிப்பிட்ட ஒரே பணிக்குரிய இடைக்காலக் கட்டுநிதி வழங்கப்பட்டு இருத்தல்.	ஒத்தியங்குகின்றது		
14.4	கட்டுநிதிக் கணக்கின் மீதியினை திறைசேரி ஏடுகளுடன் மாதாந்தம் ஒப்பிட்டுப் பார்த்தல்.	ஒத்தியங்குகின்றது		
15	**வருமானக் கணக்குகள்**			
15.1	உரிய ஒழுங்குவிதிகளுக்கு ஒத்தியங்கும் வகையில் சேகரிக்கப்பட்ட வருமானத்தில் இருந்து மீளச் செலுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டு இருத்தல்	ஏற்புடையதல்ல		
15.2	சேகரிக்கப்பட்டு இருந்த வருமானங்கள் வைப்புக் கணக்கிற்கு வரவு வைக்காது நேரடியாக வருமானத்திற்கு வைப்புச் செய்யப்பட்டு இருத்தல்.	ஏற்புடையதல்ல		
15.3	நி. ஒ. 176 இற்கு அமைய நிலுவை வருமான அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகம் அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டு இருத்தல்.	ஏற்புடையதல்ல		
16	**மனித வள முகாமைத்துவம்**			
16.1	அனுமதிக்கப்பட்ட அலுவலர் குழாத்தினரை வரையறைக்குள் பேணி வருதல்	ஒத்தியங்கவில்லை	அபிவிருத்தி அலுவலர் பணியிடங்கள் உபரியாக உள்ளன.	மிகையாக உள்ள பதவியணிக்காக அனுமதியினைப் பெற்றுக் கொள்வதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு கோரிக்கை ஒன்று அனுப்பி வைக்கப்பட்டு உள்ளது.

16.2	அலுவலர் குழாத்தில் உள்ள சகல உறுப்பினர்களுக்கும் கடமைப் பட்டியல் எழுத்து மூலம் வழங்கப்பட்டு இருத்தல்.	ஒத்தியங்குகின்றது		
16.3	20.09.2017 ஆம் திகதிய மற்றும் 04/2017 ஆம் இலக்க MSD சுற்றுநிருபத்தின் பிரகாரம் சகல அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டு இருத்தல்	ஒத்தியங்குகின்றது		
17	**பொதுமக்களுக்குத் தகவல்களை வழங்குதல்**			
17.1	தகவல்கள் அறியும் சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளின் பிரகாரம் தகவல்கள் வழங்கும் உத்தியோகத்தர் ஒருவரை நியமித்து தகவல் வழங்கும் ஆவணம் ஒன்றினை இற்றைப்படுத்திப் பேணி வருதல்.	ஒத்தியங்குகின்றது		
17.2	தாபனம் தொடர்பான நடவடிக்கைகளின் ஊடாக பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு உள்ளதுடன் பொதுமக்களுக்கு எதிராக பொதுமக்களுக்கு குற்றச்சாட்டுக்களைச் சுமத்துதல் / பாராட்டுதல் என்பவற்றிற்கான வசதிகள் வழங்கப்பட்டு உள்ளதா?	ஒத்தியங்குகின்றது		
17.3	தகவல்கள் அறியும் சட்டத்தின் 08 ஆவது மற்றும் 10 ஆவது பிரிவுகளின் பிரகாரம் வருடத்திற்கு இரண்டு முறை அல்லது வருடத்திற்கு ஒரு முறை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு இருத்தல்.	ஒத்தியங்குகின்றது		
18	**பிரசைகள் பட்டயத்தினை நடைமுறைப்படுத்தல்**			
18.1	05/ 2008 மற்றும் 05 / 2018 (1) ஆம் இலக்க அரசாங்க நிருவாக மற்றும் முகாமைத்தவ அமைச்சின் சுற்றுநிருபங்களின் பிரகாரம் பிரசைகள் மற்றும் சேவை பெறுநர் பட்டயம் ஒன்றினைத் தயாரித்து நடைமுறைப்படுத்தி இருத்தல்.	ஒத்தியங்குகின்றது		
18.2	மேற்படி சுற்றுநிருபத்தின் 2.3 ஆம் பந்தியின் பிரகாரம், பிரசைகள் மற்றும் சேவை பெறுநர் பட்டயம் ஒன்றினைத் தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் தொடர்பான நடவடிக்கைகளைக் கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் என்பவற்றிற்காக தாபனத்தினால் வழிமுறை ஒன்று தயாரிக்கப்பட்டு இருத்தல்	ஒத்தியங்குகின்றது ஒத்தியங்குகின்றது		
19	**மனித வளத் திட்டத்தினைத் தயாரித்தல்**			
19.1	2018.01.24 ஆம் திகதிய மற்றும் 02/2018 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றுநிருபத்தின் பின்னிணைப்பு 02 இன் மாதிரியினை அடிப்படையாகக் கொண்டு மனித வளங்கள் தொடர்பான திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு இருத்தல்	ஒத்தியங்குகின்றது		
19.2	பதவியணியில் உள்ள ஒவ்வொரு உறுப்பினருக்காகவும் ஒரு வருடத்திற்கு ஆகக் குறைந்தது 12 மணித்தியாலங்களுக்குக் குறையாத பயிற்சி வாய்ப்பு ஒன்று மேலே குறிப்பிடப்பட்டு உள்ள மனித வளங்கள் தொடர்பான திட்டத்தில் உறுதிப்படுத்தப்பட்டு இருத்தல்.	ஒத்தியங்குகின்றது		
19.3	மேலே குறிப்பிடப்பட்டு உள்ள சுற்றுநிருபத்தின் பின்னிணைப்பு 01 இல் குறிப்பிடப்பட்டு உள்ள மாதிரியினை அடிப்படையாகக் கொண்டு மொத்த பதவியணியினருக்குமாக வருடாந்த செயலாற்றுகை ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டு இருத்தல்.	ஒத்தியங்குகின்றது		
19.4	மேலே குறிப்பிடப்பட்டு உள்ள சுற்றுநிருபத்தின் 6.5 ஆம் பந்தியின் பிரகாரம் மனித வள அபிவிருத்தித் திட்டத்தினைத் தயாரித்தல், கொள்ளளவு விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல், திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் என்பன தொடர்பான பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டு சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டு இருத்தல்.	ஒத்தியங்குகின்றது		

20	**கணக்காய்வுப் பந்திகளுக்கு மறுமொழி வழங்குதல்**			
20.1	கடந்த வருடங்களுக்காக கணக்காய்வாளர் நாயகம் அவர்களினால் வெளியிடப்பட்ட கணக்காய்வுப் பந்திகளின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டு உள்ள குறைபாடுகள் சீர்செய்யப்பட்டு இருத்தல்.	ஒத்தியங்குகின்றது		